## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(5) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு

வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிகளில் தவறாக அனுப்பி இனங்கண்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக்களின் தொகுதியில் தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீள வெளியிட்டு திருத்த வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்காது முன்னைய காலப்பகுதிகளுக்குரிய தவறுகளை திருத்துவதற்கு மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் அத்திகதியில் உள்ளபடியான திறந்த பெறுமானத்தேய்விற்கு முறையே ரூபா 52,289,239 மற்றும் ரூபா 154,222,233 கூட்டுத்தொகை சீராக்கப்பட்டிருந்தது. | அவ்வாறு சீராக்கல் குறிப்புக்களை இடும் போது அதற்குரிய காரணமாக அமைந்தது முன்னைய வருடத்தின் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட சீராக்கங்கள் மற்றும் முன்னைய வருடத்தின் சேர்க்கப்பட்ட உருப்படியாக உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் இந்த வருடத்தில் தனித்தனி உருப்படிகளாக கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டிய காரணத்தினாலேயே ஆகும். மேலும் சொத்துக்களை உள்ளடக்கும் போது ஏற்பட்ட தவறுகளை திருத்துவதற்கு இந்த சீராக்கல் பதிவு இடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாதிருந்த காரணத்தால் ரூபா 372,651,424 கிரயமான | வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் சுமார் 250,000 எண்ணிக்கையான சஞ்சிகைகளின் இருப்பொன்று காணப்படுவதுடன் அப்புத்தகங்களின் உள்ளடக்கங்களின் பிரகாரம் அவற்றின் பயன்படு ஆயுட்காலத்தை | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டு வலு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 92 ஆம் பந்தியின் பிரகாரம் இவ்வாறான சொத்துக்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு செய்தல் ஏனைய சொத்துக்களைப் போன்றே மேற்கொள்வதில் நடைமுறைச் சிக்கல் நிலவுகின்றது.<br><br>பயன்படு ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் மூலம் பல்வேறு காரணங்களின் காரணமாக எதிர்வரும் உத்தேச பயன்படு ஆயுட்காலத்தினை பரிந்துரை செய்யப்படாத ஏனைய சொத்துக்களுக்குரிய சீராக்கங்களில் விதந்துரைக்கப்பட்டவாறு 2022 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 891,715,586 ஆன மூலதன மானியங்கள் மற்றும் ரூபா 25,307,476 ஆன வெகுமதிகள் மற்றும் பரிசுகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணுவதற்கும் அளவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன மானியங்கள் மற்றும் வெகுமதிகள் மற்றும் பரிசுகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 80 ஆவது பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நியமத்தின் 01-01-2018 முதல் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் அத்திகதியிலிருந்து ஒவ்வொரு வருடத்திலும் அதனோடு ஒத்த முறையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பணத்தை இந்த நியமத்தின் பிரகாரம் அழிப்பதற்கெனில் மானிய உடன்படிக்கையொன்று காணப்பட வேண்டும். இந்த நியமத்தில் பல்கலைக்கழகம் பின்பற்றியிராதது என கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது கணக்குகளுக்குப் பதிவுகளாக மேற்படி நியமம் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பின்பற்றப்படாதிருந்தமை என்பதனை வெளிப்படுத்துவதற்கு இணங்குகின்றேன்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்த 39 பாடநெறிகளுக்குரிய ரூபா 58,551,241 தொகையான பாடநெறி வருமானம் குறித்த வருடத்தின் வருமானமாக சரியாக இனங்காணப்படாத காரணத்தினால் அந்தந்த ஆண்டுகளுக்குரிய வருமானம் குறைத்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 58,551,241 இனால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பாடநெறி இணைப்பாளரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 26 பாடநெறிகள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் கணக்குகளை மூடுவதற்கும் 6 பாடநெறிகளை செயற்படு நிலையில் பேணிச் செல்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் 7 பாடநெறிகள் தொடர்பில் இணைப்பாளரின் சான்றிதழ் கிடைக்கப்பெறவில்லை. | ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்துடன் இணைந்த இரு நிறுவனங்களிலிருந்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய ரூபா 7,640,438 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை செலுத்துமாறு அறிவித்துள்ளதுடன் அந்நிறுவனங்களினால் கடன் செலுத்தும் காலத்தினை நீடிப்புச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. | பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கல்விசார் பணிகளுக்காக வெளிநாடு சென்றுள்ள கல்விசார் பதவியணியின் 24 பேராசிரியர்கள் பல்கலைக்கழத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகளை மீறியிருந்த காரணத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 85,640,251 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | குறித்த பணத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுத்தல், கடிதங்கள் மூலம் அறிவுறுத்துதல், பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், நலன்புரி நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், தவணைகளாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. | உடன்படிக்கை கைச்சாத்திட்டவாறு குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1996 யூன் 20 ஆந் திகதிய 928/16 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தல் | ஸ்ரீபாலி மண்டபத்திற்காக 02 கல்விசார் பீடங்களை நிறுவாது 02 கல்வி பிரிவுகளுக்காக பட்டதாரி மாணவர்களை இணைத்துக் கொண்டு மொழி மற்றும் கணனி பாடநெறிகளுக்காக பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தது. | 1996 யூன் 20 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்ரீபாலி மண்டபத்திற்காக 02 கல்விசார் பீடங்களை நிறுவுவதற்கு உரிய பணிகள் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் கல்விசார் பீடங்களை தாபிப்பதற்கு உரிய பௌதீக மற்றும் மனிதவளங்கள் போதியளவில் இல்லாமையால் பீடங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை தற்போது அந்த தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ள மையால் கல்விசார் பீடங்களை நிறுவுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு | வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2022.03.23 ஆந் திகதி இடம்பெற்ற செனட் சபையின் பரிந்துரை 2022.05.24 ஆந் திகதி இடம்பெற்ற 595 ஆம் கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. | |
| (ஆ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 2018/03 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2015 செப்தெம்பர் மாதம் முதல் 2021 நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியினுள் ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரம் ரூபா 8,605,909 கூட்டுத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | வெற்றிடங்களுக்குரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் இல்லாமையால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குறித்த நியமனங்களை மேற்கொள்ளும் வரையிலும் பல்கலைக்கழகத்தின் கடமைகளை தடையின்றி மேற்கொள்வதற்காக பணி ஒப்படைப்பு அடிப்படையில் இவ் உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- |
| (இ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2019 யூலை 25 ஆந் திகதி SC&PMU/Grant/19 ஆம் இலக்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | யப்பான் நாட்டிலிருந்து நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 15,458,330 ஆன வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கிணங்க செயற்படாது பயன்படுத்தப் பட்டிருந்தது. | திருத்தப்பட்டுள்ளது.<br><br>2020 ஆம் ஆண்டு முதல் அனைத்து மானியங்களுக்காகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 327,921,830 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,790,506 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 320,131,324 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்கள் ரூபா 269,500,000 இனால் அதிகரித்தமை மற்றும் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 128,382,475 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த 03 வெளிவாரி நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் அறவிடப்படாத காரணத்தினால் 2019 செப்தெம்பர் மாதம் முதல் 2021 ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதிக்கு உரியதான ரூபா 2,407,512 இனால் குறைவாக வாடகைப் பணம் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் வாடகை அறவிடப்படாது அரச வங்கிக் கிளை மற்றும் 02 அரச வங்கிகளின் ATM இயந்திரங்கள் 02 பல்கலைக்கழகக் வளாகத்தினுள் நிறுவுவதற்கு 2006 ஆம் ஆண்டு முதல் இடமளிக்கப்பட்டிருந்தது. | 3 வெளிவாரி நிறுவனங்கள் தொடர்பில் நிலுவைப் பணத்தை துரிதமாக செலுத்துமாறு குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மக்கள் வங்கியின் சேவைகளை வழங்குவதற்காகவும் தேசிய சேமிப்பு வங்கியின் ATM இயந்திர வசதியை வழங்குவதற்காகவும் பல்கலைக்கழகத்தின் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையொன்றோ அல்லது வாடகை செலுத்தல் தொடர்பிலோ தகவல்களை இதுவரையிலும் கண்டறிவதற்கு முடியாதிருந்தமையை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>இந்த வங்கிகள் மற்றும் ஏனைய சேவை நிலையங்களுக்காக | குறித்த தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடு வதற்கு மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அரசின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புதிய மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்ள தற்போது கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் புதிய மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த வங்கிக்காக புதிய குத்தகை உடன்படிக்கையை தயாரித்து உரிய முறையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிராத 08 பதவிகளுக்காக 06 மாதங்கள் முதல் 06 வருடங்கள் வரையான காலப்பகுதியில் ஒப்பந்த மற்றும் பணிஒப்படைப்பு அடிப்படையில் 10 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு 2020 சனவரி முதல் 2021 நவம்பர் வரையிலுமான காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 21,869,071 தொகை பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் பணிகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் மற்றும் பணி கையளிப்பு அடிப்படையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தினால் ஈட்டப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்படும் நியமனங்கள் ஆகும். | அத்தியாவசியமான பதவிகளை மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரீபாலி மண்டபத்திற்கு 2019 ஆம் ஆண்டின் பணிப்பொறியியலாளர் (சிவில்) - III தரத்திற்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்ளும் போது தகைமைகளை பூர்த்தி செய்திருந்த இரு விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையில் குறைவான | அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் பதிவேட்டின் பிரகாரம் இவ்ஆட்சேர்ப்பு பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட்டது தெரிவுக் குழுவின் பரிந்துரைக் கமைய பல்கலைக்கழக மானியங்கள் | வெளிப்படைத் தன்மையுடன் புள்ளியிடல் பதிவேடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர் |

| | | |
|---|---|---|
| புள்ளி வழங்கப்பட்டு குறைவான தகைமையுடனான விண்ணப்பதாரியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | ஆணைக்குழுவினால் இந்த நியமனம் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது. | களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |